உ

சிவமயம்



யாழ்ப்பாணம்

கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சார்ந்த

வேளாண் விழுக்குடி மரபுதித்த

# வைத்திலிங்கம் விசுவரத்தினம்

அவர்கள் சிவபதப்பேறு அடைந்தமை குறித்து

அவர்தம் குடும்பத்தினரால் வெளியிடப்பெற்ற

# நினைவு மலர்

## 22-11-97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சத்தில் நிலைத்து வாழும்
## அமரர்
# திரு. வைத்திலிங்கம் விசுவரத்தினம்



அவதாரம்:
01-08-1916.

அமரத்துவம்:
01-11-1997.

காலம் நம்மைப் பிரிக்கின்றது
கண்ணீர் நம்மில் வழிகின்றது
பிரியும் வேளை பதில் இல்லை
வழியும் கண்ணீர் பதில் கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமேபு குந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
யாசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியார வர்க்கு மிகவே

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தரவேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கியிருந் தருள்செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமே வைத்ததீவண்ணனே

# திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரன்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமேயிடமாகப்
பாலித்துநட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பொருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

# திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச் செய்த

# திருவாசகச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்லினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராதுநின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார்
தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றனேம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பிறை கண்ட அண்ணல் புது மனை புகுந்தார்

எனக்கு நண்பர்கள் பலர். அவர்களுள் விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலரே உற்ற நண்பர்கள். என் உள்ளத்தில் நிறைந்து விட்ட நல்ல நண்பர்களில் விஸ்வரத்தின மாஸ்டரே முதல் இடத்தைப் பெற்றவர். இவரிடம் மலர்ந்த முகம் கள்ளம் கபடமற்ற உள்ளம் கடமை கட்டுப்பாடு என்பவற்றோடு விடாமுயற்சி என்ற சிறப்புக் குணமும் காணப்பட்டது. இவருடன் நான் சிறுவயது தொடக்கம் இணைபிரியா தொடரும் நான் யாழ் இந்துக்கல்லூரியில் லண்டன் மற்றிக்குலேசன் வகுப்பில் சேர்ந்த பொழுது தான் ஆரம்பமாகியது. அதாவது 1938ம் ஆண்டு தொடக்கம் அப்பொழுது அன்னார் ஓர் ஆசிரியர். சுதுமலையில் ஓர் பாடசாலைக்கு துவிச்சக்கரத்தில் சென்று திரும்பிக் கொண்டிருப்பார் கம்பீரமான தோற்றம் ஆசிரியரின் உடை விசிரி மடிப்புச் சால்வையுடன் வந்து கொண்டிருப்பார். இவரின் நாவலர் விதி வீட்டின் அருகாமையில் இருந்த ஒரு பரப்பு காணி நிலத்தில் கைப்பந்தாட்டக் கழகத்தை ஆரம்பமாக்கி அக்காணியில் விளையாடி வந்தோம். விளையாட்டின் பின் அவ்விடம் இருந்த மதிலில் இருந்து கொண்டு அரட்டை அடிக்கவும் தவறியதில்லை.பல கழங்களுடன் விளையாடி வெற்றிகளும் ஈட்டினோம். கழகத்தின் நிதிநிலையை முன்னேற்ற ஓர் மேடைக் கூத்தையும் வைத்தீஸ்வரா வித்தியால மண்டபத்தில் அரங்கேற்றினோம். சுமாரான நிதியையும் திரட்டினோம். நாடகம்"அம்பிகாபதி அமராவதி" இதில் அம்பிகாபதியாக நடித்தவர் சாத்சாட் விஸ்வரே. திறமையான நடிப்பு அருமையான பாடல்கள் ரொம்பவும் புகழ்பெற்ற ஓர் நாடகம்.

ஓர் திறமான நடிகராகவும் பாடகராகவும் செயல்ப்படக்கூடிய திறமையை அன்று காட்டினார். கட்டிடக் கலையிலோ மின்சாரக் கலையிலோ ஓர் பொறியியலாளரையோ மிஞ்சக் கூடிய திறமை இருந்தது. மனோகரா தியேட்டரை தனியே நின்று. கீழ் உதவியாளர்களை வைத்துக் கொண்டு கட்டி முடித்த பெருமை இவரையே சாரும். இதை ஓா பெரிய ஸ்தாபனம் தான் செய்து முடித்திருக்கலாம். நண்பர் எப்படி சாதித்து முடித்தார் என்பது எனக்கும் பலருக்கும் வியப்புத் தான். உன்னத உயர்ந்த பணி. ஆரம்பத்தில் ஓர் சுழலும் மேடை உருவாக்கப்பட்டது. இது தான் இலங்கையிலே உருவாக்கப்பட்ட முதல் சுழலும் மேடை. அப்பொழுது தான் சினிமா ஆரம்பம். நாடகக்கலை குன்றத் தொடங்கி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை உணர்ந்த மாஸ்டர் அதை அகற்றி வெள்ளித் திரையை உருவாக்கி மனோகரா தியேட்டர் ஆரம்பித்த பங்குதாரரில் இவரும் ஒருவர். ஒரு பொறியியலாளருக்கு ஈடான உத்தியோகத்தில் அமர வேண்டும் என்ற உந்துதலில் சொற்பகாலம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இயந்திரப் பகுதியில் காலம் சென்ற ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களால் சேர்த்து வைக்கப்பட்டார். சட்டம்பித் தொழிலை விட்டுவிட்டு மேல் நாட்டு உடை அணிந்து சில காலம் தொழில் புரிந்தார். அப்பொழுதும் துவிச்சக்கரத்தில் தான் சென்று வருவார்.

விவாகம் செய்த நேரம் நேர மாற்ற வேலை ஏற்றுக் கொள்ளவில்லை. வேலைக்கு முழுக்கு போட்டு விட்டு மீண்டும் உபாத்தியார் தொழிலில் புகுந்து கொண்டார். நாட்கள் உருண்டோடின. இவரின் பெற்றோர் ஒரு சாதாரண குடும்பத்தினர். குடும்பமும் பெரிது. பணவசதியும் குறைவு. எனவே இவருக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட மூளைத் திறனுக்கு ஏற்ப ஆங்கிலக்கல்வி கற்கவோ அதனூடாக பெரிய பதவிக்கு போகவோ முடியாமல் போய் விட்டது. ஓர் தமிழ் உபாத்தியார் தொழில் தான் கிடைத்தது. எனினும் புகழ் குன்ற வில்லை. பிள்ளைகள் பெருக குடும்ப பாரத்தை செவ்வனே சுமக்க பக்கத் தொழிலாக மின்சார இணைப்பு வெலைகள் செய்து முன்னேறி பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வி மற்றும் தேவைகளைப பூர்த்தி செய்து அவர்களையும் முன்னேற்றி எல்லோரையும் நல்ல நிலையில் வெளி உள் நாடுகளில் சீரும் சிறப்புமாக வாழவைத்தார். நாங்கள் முன்பு கைப்பந்து விளையாடிய காணித் துண்டை வாங்கி அதில் ஓர் அழகான இரண்டு மாடி வீட்டைக் கட்டி அதிலும் வாழ்ந்து வந்தார். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக அந்த வீட்டை விற்று பிற்காலத்தில் கொட்டடியிலும் அல்லைப்பிட்டியிலும் காலத்தை ஓட்டினார். நெல்வயல் செய்து தன்னிறைவு பெற்றார். இரண்டு வருடங்களில் காய்க்கும் தென்னங்கன்றுகளை நாட்டினார். என்போன்ற நண்பர்களுக்கும் கொடுத்து அவரவர் வீடுகளிலும் தென்னங்குலைகளை தொங்கச் செய்தார். இப்படி பல செய்த ஓர் உன்னத உத்தமன் மறைந்து விட்டார்.

கொட்டடி வித்தியாலயத்திலும் ஓர் தீண்டாமை ஒழிப்பை நிலை நாட்டினார். அப்பள்ளிக் கூடத்தில் அமைந்த கிணற்றில் கீழ் சாதியினர் என நாம் ஒதுக்கி வைத்த பெண்கள் தண்ணீர் எடுக்க வரும் பொழுது பள்ளிச் சிறார்கள் தான் அள்ளி ஊற்ற வேண்டும். இப்பழக்கத்தை உடைத்து அவர்களையே அள்ளிக் கொண்டு போகும்படி ஓர் போராட்டத்தையே சாதித்து விட்டார். எதிர்ப்பு வந்தது. முகம் கொடுத்து வாதாடி ஒரு அளவிலேலும் தீண்டாமை ஒழிப்புக்கு ஊக்கங் கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்படுத்தினார். இளைப்பாறிய பின் மகன் விஜயகுமாரின் (குட்டி) உதவியுடன் ஓர் லேத் மெஷின் கொட்டடிச் சந்தியில் போட்டு அதிலும் தனது திறமையைக் காட்டினார். சண்டை தொடங்கி குண்டு பொழியும் காலகட்டத்தில் வீடு உடைந்தது மனைவியும் காயமடைய மீண்டும் பழைய நாவலர் வீட்டடியில் ஓர் நண்பருடன், அவர் வீட்டின் ஓர் பகுதியில் வாழத் தொடங்கினார். மனைவி வருத்தமாகி படுத்த படுக்கையாகி விட்டபோது தானே உணவு சமைத்து மனைவியை செவ்வனே பராமரித்து வந்தார். இவர் ஓர் பிடிவாதக்காரர். சிங்கராசி விட்டுக் கொடுக்கும் குணம் இல்லை. செய்வதெல்லாம் சரியாகவும் உன்னதமாகவும் இருக்கும். இவர் ஒரு சகலகலா வல்லவன் எத்தொழிலையும் செய்யக்கூடிய திறமை உண்டு. யாழ்ப்பாணத்தில் இருந்து எல்லோரும் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட பொழுது தனியே கிளாலியூடாக தன் மனைவியை சுமந்து கொண்டு புத்தளத்தில் உள்ள மகள் வீட்டிற்கு வந்து சேர்ந்தது ஓர் தனிக்கதை. எல்லோராலும் இப்படி சாதிக்க முடியாது. மனைவி இறந்த பின் எல்லாக் கிரிகைகளையும் செவ்வனே முடித்து வைத்தார். ஐந்து மகன்மார்களும் வெளிநாடுகளில் இருந்து செய்த உதவியால் அவர் சந்தோஷமாக இருந்தார். கடைசி மகன் விஜயரஞ்சனின் கல்யாணத்தையும் புத்தளத்தில் செய்து முடித்து தனது பொறுப்புக்கள் முடித்த நிலையில் இருந்து நோய் படுக்கை எதுவும் இன்றி சந்தோஷமாக மறைந்து விட்டார். மானிடன் இறப்பது திண்ணம் எனவே எவரும் ஆழ்ந்த கவலை கொள்ளத் தேவையில்லை. எமது கடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

உற்ற நண்பன்
சி. சி. அருணாசலம்
இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாணவனின் நினைவலைகள்

யுத்த மேகங்கள் உலக நிலப்பரப்பின் பெரும்பரப்பை அடைத்துக் கொண்டிருந்த 1916ம் ஆண்டில் அவலங்கள் மலியாத யாழ் மண்ணிலே பிறந்து வளர்ந்து கல்வி கற்று கற்பித்த பின் ஓய்வு பெற்று வாழ்ந்து வந்த விஸ்வரத்தினம் மாஸ்டர் புத்தளம் மண்ணுக்கு இடம் பெயர்ந்து சென்று வாழ்நாளெல்லாம் பிரியாத தன் மனைவியின் உடல் கலந்த அந்த மண்ணிலேயே தானும் சங்கமித்து விட்டார். என்ற சேதி கேட்டு அவரை இறுதியிலே தரிசிக்க இயலவில்லையே என்று ஆதங்கப்படும் அவரின் அன்புங்ளங்களில் யானும் ஒருவன். அவரின் மாணவன். நான்கு தசாப்தங்களுக்கு முன்.........

ஆசிரியப் பணியின் அருமை பெருமை உணர்ந்து ஆண்டு தோறும் ஆசிரியதினம் கொண்டாடப்படாத ஆனால் இரத்தக்கறை படியாத அந்த நாளில் அவரிடம் பயிலும் பேறு பெற்றவர்களில் நானும் ஒருவன் ஆனேன். கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் கற்பிக்க வந்தார். அவரின் பிரிய மாணவர்களில் நானும் ஒருவன். வறிய குடும்ப மாணவர்களில் அவரின் வாரப்பாடு அதிகம் அதனால் வகுப்பறைக்கு வந்தால் அதிகம் கதைக்க மாட்டார். பாடமே கண்ணாகுவார். அடிக்க மாட்டார். ஆனால் எப்பவாவது ஆத்திரம் வந்தால் விளாசுவார். அந்த அடி இன்றைக்கும் எங்களுக்கு இனிக்கின்றது. அவர் கூர்ந்த மதியாளர் தொலைநோக்கு உள்ளவர். அவரின் ஒவ்வொரு செயலிலும் நுட்பமும் தனி முத்திரையும் இருக்கும். பிற்காலத்தில் யாழ்நகரை அதனை அண்டிய தீவுப் பகுதியுடன் இணைத்து விரிவாங்கம் செய்யப்பட வேண்டும் என்று கதைகள் அடிபடத் தொடங்கமுன்னரே கொட்டடியில் வசித்து வந்த அவர் அதைவிடுத்து அல்லைப்பிட்டியில் காணி வாங்கி அளவான இல்லம் அமைத்து பின்வளவை ஒரு தென்னம் சோலையாக்கி அழகு படுத்தி வாழ்ந்து வந்தார். அந்த எழிலெல்லாம் இன்று பொய்யாப் பழங்கதையாப் போயின. பிற்காலத்தில் நான் அந்த ஊருக்கு இடம் மாற்றம் பெற்று கிராமஅலுவளராகப் பதவியேற்று பணிபுரியப் போனபோது அவரின் மாணவனானேன்.

எனது கடமை விடயத்தில் பின்னாளில் என்னைப் போன்றவர்கள் வெளியாகி மாணவனாகப் படித்து பட்டம் பெற்றதெல்லாம் அவர் போன்ற ஆசான்கள் எம்மிடத்தே இட்ட விதைகளே என்பதை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். அவர் இன்று இல்லை ஆனால் அன்றைய அவரின் கம்பீரமான தோற்றமும் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் அவர் தந்த எழுமையும் ஏமாப்புடைய கல்விப்பேறும் என் நெஞ்சில் நினைவில் நிழலாடுகின்றன.

அவரின் நாமம் வாழ்க! அவர் ஆத்மா சாந்தி பெறுக!

எஸ். ஜி. கணேசவேல்
கிராம அலுவலகர்
25, ஓட்டுமடம் வீதி யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள் விஜயகுமாரி புலம்பல்

பிறப்பெடுத்த நாள்முதலாய் அப்பா உங்கள்
பிரிய மிகு வதனத்தை பிரியா திருந்தேன்!
மறக்கேலா கொடிய இடப்பெயர்வில் அன்று
அம்மாவைப் பறிகொடுத்தேன்! இன்றோ உங்கள்
இறப்பினும் முகம்காணாப் பாவியானேன்
இறுதிக்கடன் செய்யேலாப் பேதையானேன்
சிறப்பெல்லாம் எமக்களித்த தெய்வம் உங்கள்
திருமுகத்தை எண்ணி மனம் வாடுகின்றேன்
தாய்பெற்ற மகவுதனைத் தானே பார்க்கும்
தன்மையினும் மிகப்பெரிதாம் பொறுமையோடு
நோயுற்ற அம்மாவை அவவின் நெஞ்சம்
நோகாமல் பலவாண்டு பார்த்த அப்பா
"போய்விட்டாள் என் மனைவி" என்று அம்மா
போனவழித் தனைத் தேடிப் போய்விட்டீர்கள்
வாய்வலிக்க நான் இருந்து அழுவதன்றி
வந்து முகம் பார்க்க வழி இல்லை அப்பா!

# இளைய மருமகன் சண்முகசுந்தரம் புலம்பல்

சிறுவயதிலே தந்தையினை இழந்த எனக்கு
திருமணத்து உறவாலே மாமா ஆனார்!
பெருமன்பைப் பொழிவதிலும் பேணத்தக்க
புத்திமதி சொல்வதிலும் தந்தை ஆனார்!
ஒரு வயிற்றுப் பிள்ளையாய் சுற்றம் எல்லாம்
ஒற்றுமையாய் வாழ்வதற்கு ஊக்கம் தருவார்!
வரும் நாளில் இவற்றை யார் வழங்க வல்லார்?
வருந்தி மனம் வாடுகின்றேன் அன்பு மாமா!
பேரப்பிள்ளைகளில் பேரன்பு கொண்டிருந்தீர்
யாரிடம் போய் இவர்கள் அவ்வன்பைப் பெற்றிடுவர்?
வானோடு கடல் மண்ணின் பாதையெல்லாம் அடைத்திருக்க
மாமா உங்கள் முகம் பார்ப்பதற்கு மார்க்கமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

அம்மப்பா........ அம்மப்பா........என்று சொல்லி
யாரை இனி நாம் அணைத்திடுவோம்!
எம்மை எல்லாம்
சும்மாவா அவர் தூக்கி வளர்த்தார்? அன்பைச்
சொரிந்தல்லவோ எமக்கு எல்லாம் செய்து வந்தார்
நன்றாக படித்திடவும் கண்டோர் எல்லாம்
நல்ல பிள்ளைகள் என்றிடவும் கண்டிப்போடு
செல்லத்தைக் கொடுத்தாரே! அவர்க்கு தொண்டு
செய்வதற்கு காத்திருந்தோம் போய் விட்டாரே!

கிளாலியால் போனவரை
பலாலியால் வரும் நாளை
விழாப்போல் காத்திருந்தோம்
அழாமல் என்ன செய்ய....?
அம்மம்மா தகனித்த
அம்மண்ணில் கலக்கவென்றோ
இம்மண்ணை மறந்து
எம்மை விட்டுப் போனீர்கள்....?

பேரப்பிள்ளைகள்
விஜயவாணி, ஈசன், சதீஷன், சாமினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நனவொன்று கனவானது

காலத்தின் மாறுதலால் பிரிந்திட்டோம்
நாமெல்லாம் தொலைவினிலே
எனினும் இத்தூரம் அழித்திடவில்லை
எம் அன்பை என்றும்
பட்டங்கள் பல பெற்று - கடல்
கடந்து தாய் மண்ணில்
உங்கள் ஆசி பெற்றிடவே
மலராத மொட்டுக்களுள் - எம்
நம்பிக்கைகள் தவமிருந்தன
தொலைவினிலே தனிமரமாய் - நீங்கள்
எமை நினைந்து தவிக்கையிலும்
படுக்கையிலன்று வீழ்ந்த போது - உங்கள்
இதயத்தின் எதிரொலி - எம்
நெஞ்சைப் பிளந்ததே - அன்றும்
உங்கள் திருவாயால் எமைப் பார்க்க
ஆவலாய் உள்ளீர்கள் என்ற போதும்
உங்களை விட்டு உங்கள் உயிர்
பிரியப்போவதை உணரவில்லையா - அன்றி
எமைப் பிரியப்போகும் உண்மை
தெரிந்ததன் பின் தானா - உங்கள்
உயிருள் உறைந்துள்ள அன்பு
முழுவதையும் எமக்காக தவறாது
அள்ளியள்ளி வீசினீர்கள்
உங்கள் மரணச் செய்தி கேட்டு
இம்மண்கூட சோக கீதம் ஒலித்ததால்
நாம் துடிதுடித்துப் போனோம்
நிஜங்கள் நிழலாக கண்ணீரைக் குடித்து
சோகத்தை உண்டு உடல் வலிமை
தேய்ந்து போகும் இத்தருணம்
ஓராயிரம் அன்பு மொழிகளால்
அப்பப்பா என்றழைக்கின்றோம்
கேட்கவில்லையா உங்கள் காதுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ நீங்கள் தான் மரணித்து விட்டீர்களே
ஒன்று மட்டும் இறுதி மொழி
உங்கள் உடல் மட்டுமே கருகியது
உங்கள் உயிர் என்றும் எம்முடன் வாழும்
உங்கள் நினைவுகள் எம்முள்
அணையாத தீபமாய் நிலைத்திருக்கும்
உங்கள் அன்பும் திறமையும்
எம்முள்ளே என்றென்றும் வளரும்
எனினும் உங்கள் மௌனம்
எம்மை வாட்டுகின்றதே - எம்
வேதனையைக் கூறிட எந்த
மொழியிலும் வார்த்தைகளின்றித்
தவிக்கின்றோம் ஐயகோ!

சுரேஸ் விஜயகாந்தன்
கணேஸ் விஜயகாந்தன்
கனடா

# மௌன மொழி

மலர்களின் நறுமணமிழந்து - வனங்களின்
பல வர்ண நிறம் பாத்து
இதமான குளிர்த் தென்றலினால்
சோர்விழந்தும் உறங்க மறந்த
பின் இளவேனிற் பருவமிதில்
ஆண்டவனின் தேதி தள்ளி - முன்னே
பூமித்தாய் மடியிலிங்கே
அப்பப்பா ஓருயிர் தான் என்னுயிர்க்குத்
தஞ்சமன்றே இரவோடு இரவாக
கண்களில் ஒளி மங்கி நிழல்களாக
கால்கள் வழிமறந்து தடுமாற
விரைந்தோடி வந்ததில் தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமில்லை அர்த்தமில்லை
பூட்டிக்குப் பின்னாலே ஆசைக்கொரு
பேரனென்று உங்கள் நிலைமறந்தங்கே
கண்ணீரால் களிப்புற்றீர்கள்
உங்கள் அரவணைப்பிலே - முற்றத்தில்
நிலாப்பார்த்து அன்பாக முத்தமிட்டு
உங்கள் நெஞ்சை நெகிழ வைக்க
வேண்டுமன்றே நனவாக நானிருந்தேன்
காலமது சாதகமாய் அமைந்ததில்லை
அப்பப்பா என்றழைத்து - உங்கள் குரல்
கேட்டிடக் காத்திருந்த நேரமதில்
தொலைபேசி மணி இசைத்த - சோக
கீதத்தின் ஸ்வரங்களைச் சேர்த்து - என்
வேதனையைப் பாடிட முடியவில்லை
நெஞ்சிலிருந்து பொங்கிவந்த ஆசைகள்
யாவும் வழிந்து கொண்டு நிராசைகளே
சொந்தமாகிக் கொண்டிருந்த நேரம்
உள்ளத்தில் வேர்விட்டு ஊடுருவிய
துயரத்தால் - என் விழியிரண்டும்
கண்ணீர் விட்டே களைத்துப் போயின
கனவாகக் கூடாதா என்று - ஓர் கனம்
என்னுள் குமுறினேன் - நிலை மறந்து
நடைப் பிணமாய் மலர் பறித்து
நார் தொடுத்தேன் பிஞ்சுக் கைகளினால்
நான் மழலையான தனாவோ - தோள்கள்
கனத்த தன்று மலர்வளையம் சுமந்து
அன்று உங்களருகே அஞ்சலி செலுத்தி
முதலும் கடைசியுமாய் ஓர் தடவை
உங்கள் முகத்தைப் பார்த்திட
முடியவில்லை அன்று விதியுமில்லை
மொட்டொன்று மலர்ந்ததால் தான்
பூ வொன்று வாடியதா?
என் செய்வேன் பாவி நான்
வெதும்புகின்றேன் ஐயகோ!

விஷாந் விஜயராஜன் (கனடா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ப விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி உரை

01-11-1997 இல் அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தெய்வத்தின் இறுதிக் கிரிகைகளில் பங்கு பற்றியும் பின் நடைபெற்ற அந்தியேட்டி வீட்டுக் கிரிகை யாவற்றிலும் பங்கு கொண்டு தங்கள் அனுதாபங்களையும் உதவிகளையும் நல்கிய நல்ல உள்ளங்களுக்கும் வெளிநாட்டில் இருந்து தொலைபேசி மூலமும் யாழ்ப்பாணத்தில் இருந்து கடித மூலமும் உறவினர்கள் மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் அளித்தோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

46/8 அநுராதபுர வீதி,
புத்தளம்

அச்சுப்பதிப்பு: ஸ்ரீ சாய் அச்சகம், 0181-288 0334, 0411 329144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org